


# பரத நாட்டியத்தில் சாஸ்திரம், சம்பிரதாயம், மாற்றம்

## - ஒரு நோக்கு



## சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப்பேருரை

11.10.2005


கலாநிதி.விநாயகமூர்த்தி சிவசாமி

B.A.Hons.(Lon.),B.A., M.A.(Cey.) Hon.D.Litt.(Jaffna)

முன்னாள் பேராசிரியர்,

சம்ஸ்கிருதத்துறைத் தலைவர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

யாழ்ப்பாணம்

இலங்கை

# பரத நாட்டியத்தில் சாஸ்திரம், சம்பிரதாயம் மாற்றம் - ஒரு நோக்கு

மனிதநாகரிகவரலாற்றிலே கலைகள் ஆதிகாலம் தொட்டு இன்று வரை முக்கியமான ஓரிடத்தைவகித்துவந்துள்ளன. நாகரிகத்தின் படி முறை வளர்ச்சியிலே மனிதன் பொதுவாக முதலிலே வேட்டையாடியும், மந்தை மேய்த்தும் நாடோடியாகப்பல்லாண்டுகள் வாழ்ந்து பின் விவசாயம் செய்யத்தொடங்கிய காலம் தொட்டு நிலையான வாழ்க்கையினை ஓரிடத்தில் நடந்த ஆரம்பித்துள்ளான்; ஒவ்வொரு நிலையிலும் ஆடல், பாடல் சிற்பம், ஓவியம் முதலியகலைகளில் ஏதோவகையில் ஈடுபட்டுவந்துள்ளான். விவசாயம் ஏற்பட்ட பின்பே நிலையான வாழ்வு, மொழி வளர்ச்சி, வரிவடிவ வளர்ச்சி, இலக்கியவளர்ச்சி, கலைவளர்ச்சி, அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சி முதலியன நன்கு ஏற்படலாயின, அவனுக்குப் போதிய அளவு வசதிகள் - குறிப்பாகக் கலை வளர்ச்சிக்கும் ஏற்பட்டன. வாய்மொழி மரபிலிருந்த பல அறிவியல்களை அவன் தொகுத்து அவற்றை வரன் முறைப்படி எழுதத் தொடங்கினான். அதே வேளையில் சிலவிடயங்கள் எழுதப்படாது மரபு வழியாகப் பேணப்பட்டும்வந்தன. இத்தகைய நிலையிலே குறிப்பிட்ட அறிவியல்கள் அல்லது கலைகளுக்கான சாஸ்திரம், சம்பிரதாயம், மாற்றம் பற்றிய சிந்தனைகளும் நன்கு வகுக்கப்பட்டுப் பேணப்பட்டுவந்துள்ளன.

வரலாற்றிலே ஆதிகாலம் தொட்டு நிலவி வரும் நாகரிகங்களிலே கலைகள் காலம் தோறும் மாற்றம் அடைந்துவந்துள்ளன. வளர்ச்சியடையாத நாகரிகங்கள் சிலவற்றில் அவை பெருமளவு மாற்றமின்றிப் பேணப்பட்டுவந்துள்ளன. வேறு சிலவற்றில் அவை புரட்சிகரமாக மாற்றமடைந்துள்ளன. வேறு

சிலவற்றில் அவை அழிந்து போகும் நிலையிலுள்ளன. உலகின் பலபாகங்களிலும் வாழும் நாகரிகம் நன்கு அடையாத பழங்குடிமக்கள் மத்தியிலே அவை தேக்க நிலையிலே பெருமளவு காணப்படுகின்றன.

கலைகள் பொதுவாகச்சாஸ்திரீய அல்லது தொல்சீர் அல்லது செந்நெறிக்கலைகள் (Classical arts), வெகுஜனக்கலைகள் அல்லது கிராமியக் கலைகள் (Folk Arts) அதை இருவகையாக வகுத்துக் கூறப்படும். செந்நெறிக்கலைகளின் சாஸ்திரம் அல்லது அறிமுறை பெரும்பாலும் நன்கு வகுக்கப்பட்டு எழுதப்பட்டிருக்கும். அதேவேளையில் வாய்மொழி மரபிலும் பேணப்பட்டிருக்கும். ஆனால் கிராமியக்கலைகளுக்கான அறிமுறை பெரும்பாலும் வாய்மொழி மரபிலே பேணப்பட்டிருக்கும். மேலும் ஆங்கிலத்திலே Classical Arts எனக் கூறப்படுபவை பழைமைவாய்ந்தனவாக குறிப்பிட்ட மக்களின் அல்லது தேசத்தின் தலைசிறந்தவையாக, தனிச்சிறப்புவாய்ந்தவையாக முதல் தரமானவையாக இருக்க வேண்டும். அதே வேளையிலே நிரந்தரமான பெறுமான உள்ளவையாகவும் விளங்கவேண்டும். 1 இந்த ரீதியிலே நோக்கும் போது பரதநாட்டியம் தமிழரின் தலைசிறந்த தொல்சீர் ஆடலாகவும், பண்ணிசை தலைசிறந்த தொல் சீர் இசையாகவும் விளங்குகின்றன. கர்நாடக இசையும் தமிழருடைய தொல்சீர் இசைக்கலையாக விளங்கினும், அது தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய ஏனைய திராவிடமொழிகள் பேசும் மக்களுக்கும் பொதுவான தொல் சீர் இசைக்கலை என்பதும் குறிப்பிடற்பாலது.

இன்றைய நினைவுப்பேருரையினைப் பற்றி எடுத்துக் கூறமுன் இப்பேருரையின் தலைப்பிலுள்ள பதங்களை முதலிலே சுருக்கமாகத் தெளிவுபடுத்தல் பொருத்தமாகும்.

முதலிலே பரத நாட்டியம் எனும் பதத்தினைக் குறிப்பிடலாம். நாட்டியம் எனும் பதம் நடனத்தை மட்டுமன்றி குறிப்பாக நாடகத்தையும் குறிக்கும். பரதரின் நாட்டிய சாஸ்திரத்திலே நாட்டியம் எனும் பதம் நடனம், இசை உள்ளிட்ட நாடகவியலையே குறிக்கின்றது. பரத எனும் பதம் பொதுச்சொல்லாக நடிகன் ஆடுபவன், நாடகக் குழு நாட்டியசாஸ்திர ஆசிரியர், நாடகத்தைத் தொழிலாகக் கொண்டவன், ஓர் அரசனின் பெயர், ஒரு ஜனக்குழு, புரோஹிதர், அக்கினி, ருத்திரன் (சிவன்) மிலேச்சன் முதலியோரைக் குறிக்கும். 2 மேலும், "பல பாத்திரங்களாக நடித்தும், இசைவாத்தியங்களை இசைத்தும், (நாடகத்திற்கான) பலவற்றை ஏற்படுத்தி நாடகத்தின் தலைவனாக நின்று நடத்துபவனைப்பரத(ன்)" என நாட்டியசாஸ்திரம் (35.8) கூறும், பரதம் எனும் பதம் நடனம், கூத்து எனும் பொருளிலே கி.பி 8ம் நூற்றாண்டளவில் அல்லது அதற்கு முன்பிருந்தே தமிழ் நூல்கள், சிலதொல்லியல் சின்னங்கள் மூலம் அறியப்படுகின்றது. எடுத்துக்காட்டுகளாகக் குமரகுருபரர் (17ம் நூ.) தமது சகலகலாவல்லி மாலையிலே "பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற்பனுவலும்" என நடனத்தினையும், அதற்குரிய இசையையும் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார். சைவசித்தாந்த நூல்களிலொன்றான உண்மைவிளக்கம் (36) சிவ பிரானின் திருநடனத்தினைப் "பரதம்" எனக்குறிப்பிட்டுள்ளது. கி.பி 8 ம் நூற்றாண்டறவைச் சேர்ந்த திவாகரம் எனும் தமிழ் நிகண்டிலே பரத எனும் பதம் கூத்து, நடனம் எனும் பொருளிலும் வந்துள்ளது. இதே கால பல்லவர்காலச்சிற்பங்களிலும் இதற்குச்சான்றுண்டு. இதற்கும் முற்பட்ட சாத்தனாரின் கூத்த நூலிலும் பரத எனும் பதம் ஆடல் எனும் பொருளில் வந்துள்ளது. இப்பதம் சிறப்புப் பெயராக நாட்டியசாஸ்திர ஆசிரியரையும், புகழ் பெற்ற ஒரு புராதன இந்திய மன்னருடைய பெயரையும் குறித்துள்ளது. மேலும் பரதம் என்பது பரதரின் நாட்டியசாஸ்திரத்தை மட்டுமன்றித் தமிழிலிருந்து மறைந்து போன நாடக நூல் ஒன்றின் பெயராகவும்

வந்துள்ளது. பரத நாட்டிய சாஸ்திரத்தையும் அதையொட்டிய மரபையும் இந் நடனம் பின்பற்றுவதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றது எனலாம்.

இந்த நாட்டியசாஸ்திரம் கி.பி 2ம் நூற்றாண்டளவிலே இயற்றப்பட்டிருக்கலாம் அல்லது தொகுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுப் படுகின்றது. பரத நாட்டியம் பற்றிப் பிரபல நடனக்கலைஞரான ஸ்ரீமதி ருக்மிணிதேவி அம்மையார் "தென் இந்தியாவிலுள்ள நடனவடிவங்களில் ஒன்றே பரத நாட்டியம். இதன் மிகத்தூய்மையான பாணி தமிழ் மாவட்டங்களிலே நிலவுகின்றது. உண்மையில் பரத முனிவர் வகுத்துள்ள சாஸ்திரவிதிகளின் படி அமைக்கப்பட்ட நடனம், நாட்டிய நாடக வடிவங்கள் அனைத்தும் பரத நாட்டியத்தில் அடங்குவன" 3 எனக் கூறியுள்ளமை கவனித்தற்பாலது. ,சமகாலப்பிரபல நாட்டியக்கலைஞரும், ஆய்வாளருமான கலாநிதி பத்மா சுப்பிரமணியமும் இதே போன்ற கருத்தினைக் கூறியுள்ளார்.,

எவ்வாறாயினும், இது தமிழகத்திற்குரிய தனிச்சிறப்பான தொல்சீர் நடனக்கலை என்பதில் கருத்து வேறுபாடில்லை. தமிழிலுள்ள காலத்தால் முந்திய சங்கநூல்கள் (எட்டுத் தொகை பத்துப்பாட்டு) இலக்கணநூலான தொல்காப்பியம் ஆகியன அக்காலத்திலே நிலவிய பலவகையான ஆடல்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. அக்காலத்தில் நடனம் ஆடல் அல்லது கூத்து எனவும், ஆடுமிடம் ஆடுகளம் எனவும் அழைக்கப்பட்டன. அக்காலத்திய நடனங்களில் எது அல்லது எவை இதன் முன்னோடிவடிவம் எனத்திடமாகக் கூற முடியாதுள்ளது. எனினும் அக்காலமக்கள் ஆடலிலும், இசையிலும் நன்கு ஈடுபட்டனர். சங்ககால முடிவில் (கி.பி 3ம் நூஅளவில்) அரிசலூர் எனும் இடத்திலுள்ள இரு கல்வெட்டுக்களில் பரதநாட்டியத்தில் இன்றும் பயன்படுத்தப்படும் சில சொற்கட்டுகள் (ஜதிக்குரியவை) - எடுத்துக்காட்டுகளாக ததை தாதை

த போன்றவை காணப்படுகின்றன. ,ஏறக்குறைய இதே காலத்தைச் சேர்ந்த அல்லது சற்றுப்பிந்திய காலத்திய சிலப்பதிகாரம் சித்திரிக்கும் மாதவியின் சிறப்பான நடனங்கள் நன்கு குறிப்பிடத்தக்கவை. இவை சாஸ்தீரிய அல்லது தொல்சீர்க்கலை சம்பந்தமானவை. "ஆடலும், பாடலும் அழகும் என்று இக் கூறிய மூன்றின் ஒன்று குறைபடாமல்" (சி.3.8-9), "நாட்டியநன்னூல் நன்கு கடைப்பிடித்து "(சி.3.40) மாதவி அரங்கிலே நன்கு ஆடினாள் என அந்நூலிலுள்ள அரங்கேற்ற காதை குறிப்பிடுகின்றது. இதிற்கூறப்படும் நடனத்திலே நாட்டியசாஸ்திரச் சாயல் காணப்படுவதாக ஆய்வாளர் கருதுவர். தமிழகத்திலேற்கனவே நிலவிவந்த நடனக்கலை நாட்டிய சாஸ்திரச்சாயல் பெற்றுத் தொல்சீர் கலையாக உருப்பெற்றிருக்கலாம் எனக்கருதலாம். இவ்வாறுமலர்ச்சி பெற்ற தொல்சீர் நடனக்கலை தொடர்ந்து பிற்பட்ட காலங்களிலே குறிப்பாகப் பல்லவர் பாண்டியர் சோழப் பெருமன்னர், விஜயநகர - நாயக்க மன்னர், மராத்தியர், பிரித்தானியர் ஆட்சிக் காலங்களிலும், இக்காலத்திலும் சிறப்பாக நிலவிவந்துள்ளது. இன்றைய பரத நாட்டிய ஆற்றுகை அமைப்பு கி.பி 19ம் நூற்றாண்டு முற்பகுதியில் வாழ்ந்த சின்னையா முதலிய தஞ்சைச் சகோதரர்களால் உருவாக்கப்பட்டதாகும். இதிலே நிருத்தம் (சுத்த நிருத்தம்) நிருத்தியம் (பாவரசங்கள் உள்ளவை) ஆகிய இரு பகுதிகளுக்கான நிகழ்ச்சிகள் இடம்பெறும். ஏறக்குறைய கி.பி 6ம் நூற்றாண்டு தொடக்கம் தேவரடியார்கள் இக்கலையினை சிறப்பாகக் கோயிலைமையமாகக் கொண்டு போற்றிப் பேணி வந்துள்ளனர். அதே காலத்தில் அரசசபையிலும், வேறிடங்களிலும் இது இடம் பெற்றுவந்துள்ளது. 19ம் நூ.பிற்பகுதி, 20ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இக்கலையினைப் பேணி வந்தோரில் ஒரு சாரார் மத்தியிலே நிலவிய சீர் கேடுகளால் இதனைக் கோவில்களிலாடுதற்கெதிரான இயக்கம் ஏற்பட்டு, முடிவிலே 1947லே தமிழ் நாட்டிலே கோவில்களில் இதனை ஆடுதல் சட்டபூர்வமாகத்

தடுக்கப்பட்டது. அதே காலப்பகுதியில் ஓர் அழிவில் ஆக்கம் ஏற்படுவது போல இக்கலையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டு இக்கலையினை எவரும் கற்றுக்குறிப்பாக அரங்கில் ஆடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நாட்டியத்திற்கான பாவம், ராகம், தாளம் ஆகியனவற்றை இப்பதம் (பரத) குறிக்கும் எனக்கூறப்படுகின்றது. இது பரதம், பரத நாட்டியம், தேவரடியார் /தேவாதாசிகள் நடனம், சின்னமேளம், தாசி ஆட்டம், சதிர் என இது பலவாறு அழைக்கப்பட்டுவந்துள்ளது. பின்னர் கூறப்பட்டவை பல குறிப்பிட்ட காலத்தின் பின் ஒழுக்கக்கேடுள்ள கலைஞர்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டன. இவற்றுள்ளே சதிர் எனும் பதம், உர்து அல்லது மராத்திய அல்லது வடமொழித் தொடர்புடையதென ஆய்வாளர்களில் ஒரு சாரார் கருதியுள்ளனர். ஆனால் இப்பதம் திருஞானசம்பந்தரின் தேவாரத்திலே.

*"வீதி வழி மறையவர் மிழலையுளீர் நடம்*
*சதி வருவதோர் சதிரே*
*சதிவழிவருவதோர் சதிருடையீருமை*
*அதிகுணர் புகழ்வதும் அழகே"*

என வருவது உற்றுநோக்கற்பாவது. இங்கு சதிர் எனும் பதம் நடனம் என்ற பொருளிலும் வந்துள்ளமை கவனித்தற்பாலது. இதிலே வரும் சதி ஜதியைக் குறிக்குமாயின் சதிரை நடனமெனக் கொள்ளுதல் தவறாகாது. எனவே திருஞானசம்பந்தர் காலம் தொட்டு இது நிலவிவந்துள்ளது போலத் தெரிகின்றது. இது பற்றிய மீளாய்வு பயனளிக்கலாம்.

இவ் ஆடற்கலையின் சிலபிரதான அமிசங்களைச் சுட்டிக்காட்டலாம். இது பொதுவாக ஒரு தனிக்கலைஞரின் நடனமாகும்.

அபிநயம், நடிப்பு, வாய்ப்பாட்டிசை, வாத்திய இசை, நிருத்தம், நிருத்தியம் முதலிய அம்சங்கள் கொண்ட கூட்டுக்கலையாகும். இக்கட்டத்திலே வாய்ப்பாட்டிசை, வாத்திய இசை, நடனம் ஆகிய மூன்றும் சேர்ந்ததே சங்கீதம் என்ற கருத்துக் குறிப்பிடற்பாலது. தமிழ் இலக்கிய மரபிலே இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் சேர்ந்து முத்தமிழ் என அழைக்கப்படுவது ஒப்பிடற்பாலது. சமீபத்திலே பேராசிரியர் தி.சு. நடராசன் என்பவர் சிலப்பதிகாரத்திலுள்ள அரங்கேற்றுகாதையிலே வரும் "ஆடல், பாடல் இசையே தமிழே" (வரி 45) எனும் வரியினையும், வேறு சிலவற்றையும் அடிப்படையாகக்கொண்டு முத்தமிழ் என்பது ஆடல், பாடல், இசை (பாட்டிற்கான இசை, வாய்ப்பாட்டு, வாத்திய இசை) ஆகியனவற்றோடு தமிழை - தமிழ் மொழியையும் ஒன்று சேர்த்து எண்ணுவது தான் முத்தமிழ் எனவும், பிற்காலத்திலேதான் இயல், இசை, நாடகம் ஆகியன அடங்கியதே முத்தமிழ் என்ற கருத்துக் கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். 6 முத்தமிழுக்கு அளிக்கப்படும் இவ்விரு விளக்கங்களிலும் ஆடல் முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் நாடகத்திலே பழைய காலத்தில் ஆடலும் இடம் பெற்றிருந்தது. இந்நடனத்திலே ஒன்பது ரசங்கள் அவற்றிற்கான ஸ்தாயி, சஞ்சாரிபாவங்கள் முக்கியமானவை. ரஸாநுபவமே கலையின் பிரதான இலக்காகும். இந்நடனத்தினை ஆண் பெண் இருபாலாரும் ஆடலாம். ஆண்களுக்குரியது உத்வேகமுள்ள தாண்டவமெனவும், பெண்களுக்குரியது அழகிய மென்மையான லாஸ்யமெனவும் கூறப்படினும், நடைமுறையில் ஆண்கள் லாஸ்யமும், பெண்கள் தாண்டவமும் ஆடியுள்ளனர். எனினும் பரத நாட்டியம் பெரும்பாலும் லாஸ்யவகையினைச் சேர்ந்ததெனக் கூறப்படுகின்றது. இதில் அங்க சுத்தம் (சௌஷ்டவம்) நன்கு விளங்கவேண்டுமெனக் கூறப்படுகின்றது. இந்நடனத்திற்குரிய இசையாகப் பண்ணிசையே முன்னர் இருந்தது. கர்நாடக இசை உருவாகிய பின் அது பிரபல்யமாயிற்று. பரத

நாட்டியம் மிக்கவளமுள்ள நேர்த்தியான நுண்கலையாகும். ஒரு குறிப்பிட்ட பாடலுக்குக்கற்பனைவளமுள்ள ஒரு சிறந்த கலைஞர் பல மணித்தியாலங்களாக அழகிய ஆடற்கோலங்களைச் செய்து காட்டலாம். இத்தகைய பெருவளத்தினைக் குறிப்பாக மேனாட்டு ரசிகர்கள் பார்த்து வியப்புறுவர். இது உலகியல், ஆன்மீகம் ஆகிய இருநிலைகளிலும் போற்றப்படினும் ஆன்மீகத்தன்மையே கூடுதலாக வலியுறுத்தப்படுகின்றது. குறிப்பாக இறைவழிபாட்டிற்குரிய சிறந்த ஒரு சாதனமாகவும் கொள்ளப்படுகின்றது. குறிப்பாக இது சைவசமயத்துடன் நன்கு தொடர்புடையதாகும். சைவசமயதத்துவமாகிய சைவசித்தாந்தத்தின் கலைவடிவங்களாக நடராஜவடிவமும், பரதநாட்டியமும் விளங்குகின்றன. இது பற்றிச் சமீப காலத்தில் ஆராய்ந்துள்ளவர்களில் அரிடரொம் எனும் அமெரிக்கக்கலைஞரைக் குறிப்பிடலாம்.,

தொடர்ந்து சாஸ்திரம் (அறிமுறை - theory) சம்பிரதாயம் (மரபு - tradition), மாற்றம் பற்றிச்சுருக்கமாகக் குறிப்பிடலாம், உயிரோட்டமுள்ள கலைகளிலிவை முக்கியமாக இடம் பெற்று வந்துள்ளன. பரத நாட்டியம் இதற்கு விதிவிலக்கு அன்று.

சாஸ்திரம் என்னும் வடமொழிப்பதம் “சாஸ்”, “த்ரை” எனும் இருவினையடிகள் வழியாக வந்ததாகும். “சாஸ்” எனில் கற்பித்தல், விதித்தல், பயிற்றுவித்தல், ஆட்சிபுரிதல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல், திருத்துதல், அடிப்படுத்தல், ஆட்சிக்குட்படுத்தல் எனப்பலபொருள்படும். 8 “த்ரை” எனில் பேணுதல், பாதுகாத்தல் போற்றி வளர்த்தல், அழிவிலிருந்து காப்பாற்றுதல் முதலிய பொருள்படும். 9 எனவே “சாஸ்திரம்” எனில் ஒரு குறிப்பிட்ட ஒரு அறிவியலின் விதிகளை அல்லது பிரதான அமிசங்களை முறைப்படி ஒழுங்குபடுத்தி, அவற்றைப் பாதுகாப்பதற்கான ஒழுங்கு முறை அல்லது அமைப்பு முறையைக்கூறுவது எனலாம் இதனாலே ஒரு

குறிப்பிட்ட அறிவியல் குறிப்பட்ட வரையறைக்குட்பட்டதாக விளங்கும். இந்த வரையறையிலேதான், நடனம், இசை சேர்ந்த நாடகவியல் பற்றிய காலத்தால் முந்திய நூல் நாட்டியசாஸ்திரம் என அழைக்கப்படுகின்றது. எனவே நன்கு வரையறை செய்யப்பட்ட எந்த அறிவியலும், சாஸ்திரம் எனப்படும்.

"சம்பிரதாயம்" எனும் பதம் "ஒன்றிணைந்து" எனும் பொருள்படும் "ஸம்", நன்கு எனும் பொருள்படும் "ப்ர" ஆகிய இரண்டு முன் அடைகளுடன், கொடுத்தல், கையளித்தல், வழங்குதல் எனும் பொருள்படும், "தா" எனும் வினையடி வழியாக வந்துள்ளதாகும். எனவே இது ஒரு குறிப்பிட்ட அறியவியலை அல்லது பழக்கவழக்கத்தினைப் பிற்காலத்தவர்களுக்கு அல்லது பிற்சந்ததியினருக்கு நன்கு சேர்த்து வழங்குதல், கையளித்தல் இவ்வாறு வழங்கப்பட்ட அல்லது கையளிக்கப்பட்ட அறிவியல் அல்லது பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் முதலியனவற்றைக் குறிக்கும். 10 சிலர் தாங்கள் போற்றிவளர்த்து வரும் அறிவியல், கலை, மருத்துவம் முதலியனவற்றிலே தாம் பெற்ற அநுபவம், பரீட்சார்த்தமான செயற்பாடுகளைத் தத்தம் குடும்பங்களில் எழுதிப் பேணுவதும் உண்டு. இத்தகைய பதிவேடுகள் முக்கியமானவை.

சம்பிரதாயம் என்பது பரம்பரா (ஒன்றைத் தொடர்ந்து ஒன்று செல்லுதல், இடையறாத தொடர்ச்சி, ஒழுங்கான தொடர்ச்சி), பாரம்பரியம் (வழிவழியான தொடர்ச்சி, தொடர்ச்சியான ஒழுங்கு, சம்பிரதாயபூர்வமான போதனை) எனவும் கூறப்படுகின்றது. 11 தமிழில் இது மரபு என அழைக்கப்படும்.

சாஸ்திரம். சம்பிரதாயம், ஆகியன நெருங்கிய தொடர்புடையவை, பொதுவாகச் சாஸ்திரம் குறிப்பிட்டகலையின் விதிமுறைகளைக் கூறும் பெரும்பாலும் சம்பிரதாயம் சாஸ்திரம் பற்றிய மூலநூல்களில் இடம் பெறாது; ஆனால் அவை பற்றிய உரை

நூல்களில் சிலவேளைகளில் இடம் பெறும். சம்பிரதாயத்திலே விதிமுறைகள் குறிப்பாகச் செய்கைமுறைகள் இடம் பெறும். எனவே சாஸ்திரம், சம்பிரதாயம் சிலவேளைகளில் ஒன்றையொன்று உறுதிப்படுத்தும்; குறிப்பாகப் பூரணப்படுத்தும். தென்னாசிய சமய, சமூக, பண்பாட்டு மரபுகளிலே சம்பிரதாயம் (மரபு) மிகமுக்கியமான அமிசங்களிலொன்றாகும். எடுத்துக்காட்டாக நந்திகேஸ்வரர் இயற்றிய அபிநயதர்ப் பணப்பதிப்பு ஒன்றிலே சிலஹஸ்தங்கள் குறிப்பாகக்கடகாமுகஹஸ்தம் அந்நூலிலுள்ளவாறு மட்டுமன்றி, சம்பிரதாயப்படியும், வேறொரு நூல் கூறியவாறும் காட்டப்படும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. [12] எனவே சில செய்கைமுறைகளும் பிறவும் சம்பிரதாயப்படி பிரமாணமாகக் கொள்ளப்படும். இதே போக்கு ஏனைய கலைகளிலும் காணப்படுகின்றது.

மனித நாகரிக வரலாற்றிலே சம்பிரதாயம் அல்லது மரபு ஒரு முக்கியமான அமிசமாகும். பொதுவாக வழிவழியாக, தலைமுறை தலைமுறையாக நிலவிவரும் கருத்துக்கள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் முதலியன இதனுள் அடங்கும். இவை தொடர்ந்து நிலவிவருவன. இவற்றிலே அடிப்படைகுலையாமல் மாற்றம் மேற்பட்டாலும், மாறினாலும் இவற்றைப் பின்பற்றுவோர் ஆட்சேபிப்பதிலர். எதிர்க்காமலே நியாயப்படுத்த முற்படுவர்; விரும்புவர். எனவே, மரபு நீண்டதொடர்ச்சியும், பிரமாணத்தன்மையும் கொண்டதாகும். நவீனத்திற்கும் முன்னேற்பாடாக மரபு வளர்ந்திருக்கவேண்டுமெனக் கூறப்படுகின்றது. மரபின்றிச் சமூகமில்லை. ஒரு நாட்டிலே அல்லது அறிவியலிலே புரட்சி ஏற்பட்டாலும் அதற்கும் முற்பட்ட காலத்திற்குமிடையிலுள்ள தொடர்புகள் முற்றாக அறமாட்டா.

பேராசிரியர் அக்ரனின் கருத்துப்படி “மரபிலே கடந்த காலத் தொடர்ச்சியிருக்கலாம், மாறாமை, பிரமாணத்தன்மை

முதலியனவும் இருக்கும்". [13] பேராசிரியர் டெறெற் என்பவரின் கருத்துப்படி "கடந்த காலத்தைச் சேர்ந்த எந்த அம்சம் கடந்த காலத்தைத் திரும்பவும் முன்னிலைப்படுத்திக் காட்சியளிக்கிறதோ அதுவே மரபாகும். மரபு கடந்த காலத்தின் மாறாத் தன்மையையன்றிக் கடந்த காலக்கருத்துக்களைச் சமகாலம், இடத்திற்கேற்றவாறு புத்துருவாக்கத்துடன் கொண்டு விளங்கும்". [14] எனவே மரபு எதோ வகையிலே தொடர்ந்து நிலவும். அதிலே காலத்திற்கேற்ற மாற்றத்திற்கு இடமுண்டு. அதை முற்றாக அழிக்கமுடியாது. அதேவேளையில் உயிரோட்டமுள்ள கலைகளிலே காலத்திற்கேற்ற மாற்றங்கள் இடம் பெறுவன. அவை அவசியமுமே.

இங்கு கூறவேண்டிய தலைப்பிற்கேற்பப் பரதநாட்டியத்திற்கான அடிப்படைநூல்கள் சிலவற்றிலே சாஸ்திரம், சம்பிரதாயம் பற்றிக் கூறப்பட்டுள்ள சில கருத்துக்களைச் சற்று நோக்கலாம். இந்நாட்டியத்திற்கான அபிநயம் பற்றிக்கூறும் பிரதான நூல்களில் ஒன்று நந்திகேஸ்வரரின் அபிநயதர்ப்பணமாகும். (கி.பி 11ம் நூ.அளவில்) இந்நூலின் முற்பகுதிலே பெருமளவு அபிநயஹஸ்தங்கள் பற்றியும், பிற்பகுதிலே பாதபே தங்கள் (கால் அசைவுகளின் வகைகள்) பற்றியும் விவரிக்கப்படுகின்றன. நூல் முடிவிலே நூலாசிரியர் கூறியுள்ளகருத்துக்கள் யதார்த்தமானவையாகவும், சாஸ்திரம், சம்பிரதாயம், குறிப்பிட்டகலை (இங்கு நடனக்கலை) வித்தகர்களின் (குருமார்உட்பட) முக்கியத்துவத்தினை வலியுறுத்துவனவாகவும் அமைந்துள்ளன. அதாவது "மண்டலங்கள், உத்பிளவனங்கள், பிரமரிகள், சாரிகள், கதிகள் ஆகியன ஒன்றோடொன்று கொண்டுள்ள தொடர்புகளால் எண்ணற்றவை; பலவகைப்பட்டவை. நடனத்தில் அவற்றின் பயன்பாடுகளைச் சாஸ்திரம், சம்பிரதாயம், நல்லோரின் (நல்ல அறிஞர்களின்) அன்பு, ஆதரவு மூலமே கற்க வேண்டும். வேறு

வழிகளினால் அறிய முடியாது” (322 324) என அழுத்திக்கூறப்படடுள்ளது. இதிலே குறிப்பிட்ட நடன அறிவியல் முடிவில்லாதது என்பதும், எனவே நூலாசிரியர் கூறாமல் விட்டவற்றை மேலும் காலப்போக்கிலே சாஸ்திரம், சம்பிரதாயம், நல்ல அறிஞர்களின் உதவிபெற்று ஒருவர் தொடர்ந்து கற்று அறியவேண்டுமென்பது அழுத்திக் கூறப்படுகின்றது. மேலும் சாஸ்திரம், சம்பிரதாயம் ஆகியனவற்றின் அடிப்படையிலே குறிப்பிட்டகலை (நடனக்கலை)யிலே துறைபோகியவரின் உதவியுடன் கற்றுத் தெளிவுபெறுவதுடன் புத்தம் புதிய கருத்துக்களைக் கூறுவதற்கான வாய்ப்பும் அளிக்கப்படுகின்றது.

நாட்டியத்திற்கான சாஸ்திர நூல்களிலே ஏற்கனவே குறிப்பிட்ட அபிநயதர்ப்பணம், இதற்கு முற்பட்ட காலத்தியபரதரின் நாட்டியசாஸ்திரம் (கி.பி 2ம் நூ.அளவில்), சாரங்கதேவரின் சங்கீதரத்னாகரம் (கி.பி 13 ம் நூ. இதிலே இசையும், நடனமும் பற்றிக் கூறப்படுகின்றது) முதலிய வடமொழி நூல்களிலும், தமிழிலுள்ள கூத்த நூல், சிலப்பதிகாரம், பரதசேனாபதீயம், பஞ்சமரபிலுள்ள கூத்துமரபு மகாபாரதசூடாமணி ஆகிய நூல்கள் சிலவற்றிலும், சாஸ்திரம், சம்பிரதாயம் பற்றி வருவனவற்றைச் சுருக்கமாகக் குறிப்பிடலாம். அக்காலத்திலே வடமொழி தென்னாசியப்பொது மொழியாக, பண்பாட்டு மொழியாக விளங்கியபடியால் அறிஞர்கள் பலர் இம்மொழியிலே பல அறிவியல்கள் பற்றி எழுதியுள்ளனர். எனவே வடமொழியிலுள்ளவை அனைத்தும் வடநாட்டிற்குரியன அல்ல தமிழர்களும் வடமொழியில் எழுதியுள்ளனர். அதை விட வடமொழியில் பிற மாநிலங்களைச் சேர்ந்த அறிஞர் பலர் எழுதியுள்ள நடன, இசை நூல்களிலே தென்னிந்தியாவிலே நிலவிய நடனம், இசை பற்றிய முக்கியமான குறிப்புகள் சில உள்ளன. எடுத்துக்காட்டுகளாக, பரதர் நாட்டியசாஸ்திரத்திலே சமகாலத்தென்னிந்தியாவிலே நிலவிய

சிறப்பான இசை, நடனம் பற்றி தாக்ஷிணாத்ய பிரவிருத்தியிலே குறிப்பிட்டுள்ளமையும், சங்கீதரத்னாகர ஆசிரியர் தமிழ் நாட்டுக்குரிய பண்கள் பற்றிக்குறிப்பிட்டுள்ளமையும் உற்று நோக்கற்பாலன.

துரதிர்ஷ்டவசமாகத் தமிழிலிருந்த பழையகால இசை, நடன, நாடக நூல்கள் பல கால வெள்ளத்தால் மறைந்து விட்டன. இவை பற்றிச் சிலப்பதிகார உரையாசிரியர்களான அரும்பத உரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும், வேறு சிலரும் குறிப்பிட்டுள்ளனர். இவற்றுள் பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், இசை நுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாபதீயம், மதிவாணர் நாடகத்தமிழ் நூல், கூத்தநூல் முதலியன இசை, நடனம், நாடகம் பற்றியனவாகும். இவற்றுள் பல கிடைக்கவில்லை. ஏனையவற்றின் சில பகுதிகளே கிடைத்துள்ளன.

இன்று கிடைத்துள்ள நடனம் பற்றிய வடமொழி, தமிழ் நூல்களை நோக்கும் போது அவற்றின் ஆசிரியர்கள் தத் தம் காலத்திற்கு முற்பட்டமுதனூலாசிரியர்களையம், அவர்களிற்சிலரின் நூல்களையும் மதிப்புடன் கூறிப்பிட்டுத்தாம் அவர்களுக்குக் கடப்பாடுடையவர்கள் என்பதையும் கூறத்தவறிலர், இதன் மூலம் தாம் வாழையடி வாழையாக நிலவிவந்துள்ள நடனமரபில் வந்துள்ளனர் என்பதையும் புலப்படுத்தியுள்ளனர்.

"முன்னோர் மொழி பொருளேயன்றியவர் மொழியும் பொன்னே போற்றுப" என்பதற்கேற்ப அபிநயதர்ப்பணத்திலே பல இடங்களிலே ஆசிரியர் தாம் பரதரையும், பரதாகமங்களையும், நடனவித்தகர்களையும் பின்பற்றியே தமது நூலினை இயற்றியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். எடுத்துக்காட்டுகளாக, "பரதர் முதலியோரால் கூறப்பட்டுள்ளது" *(191)*, "பரதாகமங்களை அறிந்தோரால் அறியப்படும் *(166)*", "பரதாகமத்திலே

கூறப்பட்டுள்ளது" (159), நாட்டியத்தை நன்கு அறிந்தோரால் (167), எனப்பலவாறு கூறப்பட்டுள்ளமை உற்றுநோக்கற்பாலது. பரதர் முதனூல் - நாட்டிய முதனூல் ஆசிரியர். ஆகு பெயராக பரத எனும் பதம் பரத நாட்டிய சாஸ்திரத்தையும், அதன் ஆசிரியரையும் நடனத்தையும், நடனத்திற்கான சாஸ்திரத்தையம் குறிக்கும். "ஆகம" எனில் வழிநூலைக்குறிக்கும். பரதரைப் பின்பற்றிப் பிற்காலத்திலே எழுந்த வழிநூல்கள் பரதாகமம் என அழைக்கப்பட்டன. ஒப்பீட்டுரீதியிலே வேதங்களையும், வழிநூல்களான ஆகமங்களையும் ஒன்று சேர்த்து வேதாகமம் என அழைக்கப்படுவதைச் சுட்டிக்காட்டலாம்.

நாட்டிய முதனூலாசிரியரான பரதரும் நாட்டியசாஸ்திரத்தின் முடிவிலே "பல்வேறு விதிகளுக்கேற்றவாறு செய்கைமுறை கொண்டநாட்டியவியல் (இங்கு நாடகவியல் பற்றிய நூலையே பெரிதும் குறிக்கிறது) பற்றிய நூலை எழுதியுள்ளேன். இங்கு (இது தொடர்பாகக் கூறப்படாதவற்றை உலகத்தின் (ஆகுபெயராக மக்களின்) செயற்பாடுகளையும் அவ்வாறே செய்வதாலும், விதிகளை அறிந்தவிற்பன்னர்கள் இவைபற்றிச் சிந்திப்பனவற்றையும் துணைகொண்டு அறிந்து கொள்ள வேண்டும் (நா.சா.36.33)" எனக்கூறியுள்ளமை கவனித்தற்பாலது. எனவே பிற்காலத்தவரான நந்திகேஸ்வரர் பரதரைப் பின்பற்றிக் கூறியுள்ளார் என்பது தெளிவு.

நந்திகேஸ்வரருக்குப் பின் வந்த சங்கீத ரத்னாகரத்தினுள்ள நடன அத்தியாய முடிவிலே நூலாசிரியர் "நடன சாஸ்திரம் எனும் பெருங்கடலைக்கடைந்து (நன்கு நுணுகி ஆராய்ந்து) அதன் சாரத்தினை மதிநுட்பமுள்ளோர். திருப்தியோடு அதனைச் சுவைக்கும் வகையில் கொண்டுவந்துள்ளேன்." எனவும், "பழைய முனிவர்களின் - ரிஷிகளின் (பரதமுனிவர் முதலியோர்) வழிநின்று

அதாவது அவர்களைப்பற்றியே இதனை எழுதியுள்ளதாகவும் நல்வழியிலே செயற்படுவோரை நல்லவர்கள் இயல்பாகவே விரும்புவர்" எனவும் குறிப்பிட்டுள்ளார். *(சா.ர.7.1672 : 1676)*

தமிழிலுள்ள காலத்தால் முந்திய நடன நூல்களில் சாத்தனாரின் கூத்தனூல் முழுமையாகக்கிடைக்காவிடினும் நன்கு குறிப்பிடற்பாலது. இவர் தொல்காப்பியர் காலத்தவரெனச் சிலர் கொள்ளினும், வேறு சிலர் அவருக்குப்பிற்பட்டவர் எனக்கூறுவர். எனினும் இதிலுள்ள சூத்திரங்கள் தொல்காப்பியச் சூத்திரங்களைப்போன்று காணப்படுகின்றன. தொல்காப்பியர் போலவே இவரும் தமக்கு முற்பட்ட அறிஞர்களைப் பொதுப்படக் கூறியுள்ளார். எடுத்துக்காட்டுகளாக "நிறைமொழி மாந்தர் மறைமொழிச் சொல்லும் இறைவன் கூத்தில் இயன்றதே என்ப" எனவும், "ஒன்பதும் சுவையாய் உணர்த்தினர் முன்னோர்" எனவும, "இழை இழையாகச் சுவைசுவை இணைந்து நடப்பது கூத்து என நாட்டினர் முன்னோர்" எனவும் வந்துள்ளவற்றைக் குறிப்பிடலாம். இந்நூலின் படி சிலபிரானே அகத்தியருக்கு கூத்தினைக்கற்பித்தார் எனவும், பின்னர் அகத்தியர் கூத்திலக்கணம் பற்றி எழுதினார் எனவும், அவரைப் பின்பற்றிப் பின் வந்தோர் எழுதினர் எனவும் கூறப்படுகின்றது. தமிழிலுள்ள மறைந்து போன நடன நூல்களில் ஒன்றான பரதத்தை அகத்தியர் எழுதினார் எனவும் அறியப்படுகின்றது.

இன்று கிடைத்துள்ள பரதசேனாபதீயத்தில் ஒருபகுதியே உள்ளது. இதிலும் மேற்குறிப்பிட்டவாறு "என்ப" போன்ற சொற்கள் மூலம் முன்னோர் கூறிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

தமிழிலே நடனம் பற்றிக் கூறும் நூல்களிலே இளங்கோவின் சிலப்பதிகாரம் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். முத்தமிழ்க்காப்பியமாக விளங்கும் இந்நூல் தலை சிறந்த

இலக்கியப்படைப்பாக மட்டுமன்றிச்சமகால சாஸ்திரீய, கிராமிய நடனங்களைக் கொண்டுள்ள நடனக்கருவூலமாகவும் விளங்குகின்றது. அதிலுள்ள அரங்கேற்று காதை சிறந்த நடன ஆற்றுகை பற்றிய விபரங்களைக் கொண்டு விளங்குகின்றது. அதாவது நடன ஆற்றுகைக்குரிய தலைசிறந்த நடனமணியான மாதவி, இதற்கான சிறந்த வாய்ப்பாட்டிசை, வாத்திய இசைக்கலைஞர்கள், அரங்கில் வெகுவிமரிசையாக இடம் பெற்ற நடன ஆற்றுகை முதலியன குறிப்பிடப்பட்டுள்ளன. இந்நிகழ்விலே நாட்டு மன்னனும், மற்றும் பலரசிகர்களும் பங்கு பற்றிச் சிறப்பித்தனர்; கலையினை நன்கு ரசித்தனர். இவ்வகையிலே ஒருசாஸ்திரீய நடனத்திற்குரிய அனைத்து அமிசங்களும் நன்கு இடம் பெற்றுள்ளன. இவ்வகையில் இது ஒரு நடனசாஸ்திர நூல்போலவும் விளங்குகின்றது. நடனம் பற்றிய இத்தகைய விபரங்களடங்கிய இந்நூலிலே முற்பட்டகால நடன நூல்கள், மரபு முதலியன பற்றிய அரிய தகவல்களும் ஓரளவு இடம் பெற்றுள்ளன. இவற்றுட் சில பற்றிக் குறிப்பிடலாம்.

மாதவியின் ஆடல் பற்றிக் குறிப்பிடுகையில்

"இருவகைக் கூத்தின் இலக்கணமறிந்து
பலவகைக் கூத்தும் விலக்கினிற்புணர்த்துப்
பதினோராடலும், பாட்டும், கொட்டும்
விதிமாண் கொள்கையின் விளங்க அறிந்து *(சி.3.12-15)* எனவும்,

"வேத்தியல் பொதுவியல் என்றிருதிறத்தின்
நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து *(சி.3.39.40)* எனவும்,

"எண்ணிய நூலோர் இயல்பினின் வழாது" *(சி.3.95)* எனவும்,
"நூல் நெறிமரபின் அரங்கம்" *(சி.3.99)* எனவும்,
மீண்டும்
"நாட்டியநன்னூல் கடைப்பிடித்துக் காட்டினள்" *(சி.3.0158-159)* எனவும்

வந்துள்ளனவற்றிலே குறிப்பாக ஆடலிலே பழைய நூல்கள், மரபு என்பன பின்பற்றப்பட்டமை தெளிவாகின்றது.

இசை பற்றிய நூல்களிலும் இதே போக்கினை அவதானிக்கலாம், ஏற்கனவே குறிப்பிட்ட சாரங்கதேவர் தமது சங்கீதரத்னாகரத்தின் முற்பகுதியில் இசை பற்றிக் கூறுமுன்னர் தாம் எவ்வாறு அந்நூலினை எழுதினார் எனக் குறிப்பிட்டுள்ளார். அதாவது "தமக்கு முன்வாழ்ந்த சங்கீதவிற்பன்னர் உருவாக்கிய சங்கீத சாஸ்திரமென்னும் பெருங்கடலைக் கடைந்து தமது ஆழமான அறிவெனும் மத்தினாலே கடைந்தெடுத்த வெண்ணெயே அந்நூல் *(ச.ர.1.20-21)*" என அவர் கவிஞருக்குரிய பாணியிலே குறிப்பிட்டுள்ளார். எனவே இவர் தமக்கு முன் வாழ்ந்த சங்கீத விற்பன்னர்களின் கருத்துக்களை அலசி ஆராய்ந்து இந்நூலை எழுதியுள்ளார் என்பது புலப்படும். இதே போன்ற கருத்து ஏற்கனவே குறிப்பிட்டவாறு நூலின் நடனம் பற்றிய அத்தியாய முடிவிலும் வந்துள்ளது. இதே போன்ற போக்கு சிற்பம் போன்ற பிறகலைகள், இலக்கணம் பற்றிய நூல்கள் தர்மசாஸ்திர, அர்த்தசாஸ்திர நூல்களிலும் பிவற்றிலும் காணப்படுகின்றது.

ஏற்கவே குறிப்பிட்டவாறு சாஸ்திரீய அல்லது தொல்சீர் நடனக்கலை, இசைக்கலை போன்றவை குறிப்பிட்ட கட்டமைப்புக்கு ஏற்பவே அமைந்துள்ளன. இக்கட்டமைப்புக்குனலந்தால் அவற்றின் இயல்பான அமைப்புப் பாதிக்கப்படும். இயல்பு நிலை பாதிப்படையும். எனவே தான் பரத நாட்டியம், கர்நாடக இசை, பண்ணிசை போன்றவற்றிற்கான ஆற்றுகைகள் பற்றிய விமர்சனங்கள், மதிப்பீடுகளிலே தூயபரதம், அங்கசுத்தம், தூயகர்நாடக இசை, தூயபண்ணிசை போன்ற சொற்றொடர்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஏற்கனவே சிலப்பதிகார ஆசிரியர் மாதவியின் நடனம் அதற்கான பக்க வாத்திய இசை, வாத்திய இசை பற்றிக் கூறுகையில் அவை

அனைத்தும் முரணின்றி ஒன்றிணைந்து நேர்த்தியாகச் செயற்பட்டதை அரங்கேற்றுகாதையிலே நன்கு எடுத்துக்கூறியுள்ளார். தொல்சீர் இசைக்கலை, நடனக்கலை, சிற்பக்கலை போன்றவற்றிலே சிறந்த கலைஞர்களும், சுவைஞர்களும் குறிப்பிட்ட ஆற்றுகை அல்லது வடிவம் (சிற்பம்) அதற்கேற்ற விதிகள், மரபு முதலியன மீறப்படாது முழுமையான அழகுக்கலை வடிவமாக விளங்குவதையே மிகவும் விரும்புவர்; சிறிது தவறு ஏற்படினும் பெரிதும் கவலைப்படுவர். எடுத்துக் காட்டாக வழிபாட்டிற்குரிய குறிப்பிட்ட தெய்வ விக்கிரகத்தை எடுத்துக்கொண்டால் அதிலே சிறிதளவு குறைபாடு இருந்தாலும் அது பயப்படுத்தபடமாட்டாது. தெய்வவிக்கிரகம் என்றவகையில் மட்டுமன்றி, அழகியல் ரீதியிலும், சாஸ்திர ரீதியிலும் அது வெகு நேர்த்தியாக இருக்க வேண்டுமென்பதே சிற்பியின் இலக்காகும். நடனத்திலும், இசையிலும் இதேபோக்கினை அவதானிக்கலாம். எனவே குறிப்பிட்டகலைவடிவம் முழுமையாக விளங்குவதற்கு சாஸ்திரம், சம்பிரதாயம் அழகியல், மதிநுட்பம் பயிற்சி முதலியன அவசியமாகும்.

மேலும் காலத்திற்கேற்றவாறு குறிப்பிட்டகலையில் - இங்கு நடனக்கலையில் மாற்றமேற்படுதற்கு இதற்கான சாஸ்திரம், மரபு ஆகியனவற்றில் இடம் அளிக்கப்பட்டுள்ளது. இவை மாற்றமுடியாத இரும்புச்சட்டங்கள் அல்ல; கலையின் வரையறை குலையாத வகையில் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மை வாய்ந்தவை எனவே தான் பந்தணை நல்லூர் பரத நாட்டியபாணியிலே, சமகாலத்திலே தலைசிறந்த ஒரு நர்த்தகியாக விளங்கும் அலர் மேல் வள்ளி "எந்த ஒரு சாஸ்திரீய அல்லது தொல்சீர் (classical) கலைக்கும் வரன்முறைகளும், நியதிகளும் உள்ளன. பரதநாட்டியத்தைப் பொறுத்தவரையில் இந்த வரன்முறைகள் பலர் நினைப்பது போலக் குறுகிய அன்று அல்ல. மிகவும் பரந்து விரிந்துள்ள ஒன்று. அந்த எல்லையினுள் கற்பனை வளம் உள்ள எந்தக் கலைஞரும்

பலவற்றைச் சாதிக்கலாம். மேலும் நம்முடைய பாரம்பரியம் வளைந்து, விரிந்து, நெகிழ்ந்து கொடுக்கக் கூடியது. ஆகையால் பாரம்பரியம் புதுப்பாணிகளுக்கு வழி தருவதில்லை என்பதை ஒப்புக் கொள்ளமாட்டேன்"[15] என யதார்த்தமாகவே கூறியுள்ளமை மனங்கொளற்பாலது.

எனவே, மேற்குறிப்பிட்ட தொல்சீர் நடனம், இசை போன்ற கலைகளிலே ஏற்கனவே குறிப்பிட்டவாறு அவற்றின் மரபிலே மாற்றங்கள் ஏற்படுத்தற்கு இடம்மளிக்கப்பட்டுள்ளமை தெட்டத்தெளிவு. ஆனால் இம்மாற்றங்கள் அவ்வக்கலைகளின் கட்டமைப்பு அல்லது வரம்பு அல்லது வரையறை குலையாமல் குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளே செய்யப்படவேண்டும். கட்டுக்கோப்பு அல்லது வரையறை குலைந்தால் அது வேறுகலையாகிவிடும். அடிப்படைத் தொடர்ச்சி பாதிக்கப்படும்

நடனம், இசை மரபுகளில் ஏற்பட்டுள்ள அல்லது சேர்க்கப்பட்டுள்ள புதிய அமிசங்கள் சில பற்றிக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாகத்தில்லானா வடஇந்திய இசை மரபிலிருந்து தான் கர்நாடக இசை, பரத நாட்டியம் ஆகியவற்றிலே உள்வாங்கப்பட்டு இம்மரபுகளுக்கு ஏற்றவாறு நன்கு பயன்படுத்தப்படுகின்றது. இதே தில்லானா தொடர்ந்து ஹிந்துஸ்தானி இசையிலும், வடஇந்திய நடனத்திலும் பயன்படுத்தப்படுகின்றது. இதன் ஆற்றுகையில் ஒற்றுமை, வேறுபாடு உள்ளன. ஒருகருத்தினை அல்லது இசை அல்லது நடனவடிவத்தினைப் பிறிதொரு மூலத்திலிருந்து பெற்றாலும், இதனைக் குறிப்பிட்ட இசை அல்லது நடன மரபிற்கேற்பத் திருத்தியமைத்தல் (adaptation) அவசியமாகின்றது. இவ்வாறு திருத்தியமைத்தற்கும் கலைஞனுக்கும் குறிப்பிட்ட கலைகளின் தேர்ச்சி, மதிநுட்பம், திறன் முதலியன தேவை. இவ்வாறு நன்கு திருத்தியமைப்பவன் புதிய ஆக்கத்தினைச் செய்கிறான். அவனுடைய

கலைப்படைப்பு புதுமையானதாகின்றது.

கர்நாடக இசை மரபில் வயலின் இன்று அத்தியாவசியமான இசைக்கருவியாகும். ஆனால் இவ் இசைமரபில் இது சுமார் இரண்டு நூற்றாண்டுகளாகத்தான் பயன்படுத்தப்படுகின்றது. கர்நாடக இசையுடன் ஒன்றிணைந்த இன்றியமையாத வாத்தியமாக விளங்கும் வகையில், கர்நாடக இசைக்கேற்றவாறு பாலுஸ்வாமி தீக்ஷிதர், வடிவேலு முதலியோர் இதனைத் திருத்தியமைத்துள்ளனர். இதுவும் ஒரு புதுமையே.

இலக்கியத்திலிருந்து பலருக்கும் தெரிந்த ஓர் எடுத்துக்காட்டினைக் குறிப்பிடலாம். ராமாயணம் முதன் முதலாக இலக்கிய வடிவிலே வால்மீகி எனும் பெரும் புலவனால் வடமொழியில் எழுதப்பட்டதாகும். அவரைத் தொடர்ந்து தமிழ், தெலுங்கு, வங்காளி, ஹிந்தி முதலிய பிற இந்திய மொழிகளிலும், தென்கிழக்காசிய மொழிகளிலும் பலர் ராமாணயத்தை எழுதியுள்ளனர். ஆனால் அவை அனைத்தும் வால்மீகியை முழுமையாகப் பின்பற்றப்பட்டு எழுதப்பட்டில. அவை தனிப்பட்ட இலக்கிய ஆக்கங்களாகவே விளங்குகின்றன. எடுத்துக்காட்டாகக் கம்பராமாயணத்தை வால்மீகிராமாணயத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது கம்பனின் கவிதை மேதாவிலாசம் நன்கு புலப்படும்.

கலைகளிலே சாஸ்திரம் ஒருவகையிலே மொழிக்குரிய இலக்கணம் போன்றதாகும். தமிழ் இலக்கண நூலான நன்னூல் “பழையனகழிதலும், புதியனபுகுதலும் வழுவல கலைவகையினானே” எனக் கூறுவதுபோலக்காலத்திற்கு ஒவ்வாதவை கைவிடப்பட்டுப் புதியனவற்றைப்புகுத்தல் பொருத்தமானதே. பிழையன்று. மாற்றம் எவ்வாறு ஏற்படுத்தலாம் என்பது ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இலக்கணம் இல்லாவிட்டால் மொழிக்கு எத்தகைய சீர் குலைவுகள்

குழப்பங்கள் ஏற்படுமோ அவ்வாறே கலைகளிலும் விதிகள் பின்பற்றப்படாவிடில் தகாத விளைவுகள் ஏற்படும். மொழியிலும் மரபு நன்கு போற்றப்படுகின்றது.

நடனம், இசை போன்றகலைகள் நீண்டகாலமாகக் குரு சிஷ்ய முறைப்படியே கற்கப்பட்டு வந்துள்ளன. சுமார் ஒரு நூற்றூண்டிற்குள்ளே தான் இவை படிப்படியாக நிறுவனரீதியாகக் கற்பிக்கப்படுகின்றன. எனினும் குரு சிஷ்யமுறையிலான கற்பித்தல் முறை சில இடங்களில் உள்ளன. எவ்வாறாகிலும் சமீபகாலம் வரை தென்னாசியக்கலைகள் முதலியன இம் முறைப்படி தான் பயிலப்பட்டன. எனவே தான் கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி "இந்தியக்கலைகளின் வரலாறு தொடர்ச்சியான மாணவபரம் பரையின் வரலாறாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார். குரு சிஷ்யக்கல்விமுறை கலைகளின் வரலாற்றிலும் முக்கிய மானதாகையால் அது பற்றிச் சிறிது குறிப்பிடலாம்.

குரு – சிஷ்ய முறையினை நன்கு விளங்காதவர்களில் ஒருசாரார் இதனை நன்கு கண்டித்தும் உள்ளனர். உண்மையான குரு தன்னுடைய மாணவர்களைப்பிள்ளைகள் போலவே கருதிக்கலையினைப்புகட்டுவர். கெட்டபழக்க வழக்கம் அல்லது கல்வியில் நாட்டம் குறைந்த மாணவனையுமவர் பெருமளவு திருத்திவிடுவார். பெற்றோர் பிள்ளைகளின் நலனில் என்றும் மிகவனமாக இருப்பது போலக்குருவும் மாணவனின் நலனில் அக்கறைகாட்டுவார். கண்டிக்கவேண்டிய இடத்திலே கண்டித்து அவனை நல்வழிப்படுத்துவார். ஒழுக்கக்கேடுகள், பணஆசை முதலியன உள்ள சில குருமாரின் முன் உதாரணங்களால் நல்லகுருமாரின் நேர்மையான கலைச் சேவைகள் சிலவேளைகளில் மழுங்கடிக்கப்பட்டுள்ளன. சென்ற நூற்றாண்டிலே வாழ்ந்த பந்தணை

நல்லூர் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை, வழுவூர் ராமையாப்பிள்ளை போன்றோர் தலைசிறந்த சில பரத ஆசான்களாகக் குறிப்பிடற்பாலர். அவர்களுடைய வாழ்க்கைவரலாற்றினை நோக்கும்போது அவர்களிடையே புரிந்துணர்வும், ஒத்துழைப்பும் நிலவியதை அறியலாம். அவர்கள் வறிய மாணவர்களுக்கு இலவசமாகப் பரதம் கற்பித்தனர் என்பதும், மாணவர்களிடத்து நல்லுறவும், புரிந்துணர்வும் கொண்டிருந்தனர் என்பதும் அறியப்படுகின்றது.

எனவே இது வரை கூறியவாறு ஒருகலைஞர் தான்கற்றவற்றிற்கு மேலாகத் தற்திறன் (originality), மதி நுட்பம் கொண்டு சாஸ்திரம், சம்பிரதாயமாகியவைற்றை மீறாது புதிய கருத்துக்களைக் கூறலாம்; புதிய கலைப்படைப்புகளைச் செய்யலாம். அதே வேளையில் அவர் தன்னுடைய ஆசான்கள், பிற ஆசான்களுடன் கலந்துரையாடித்தனது கலையறிவை மேம்படுத்தலாம்; ஏனையோருக்கும் புகட்டலாம். இந்திய கலைமரபுகளை நன்கு அறிந்தவர்களில் ஒருவரான கலாநிதி நாராயண மேனோன் குரு - சிஷ்ய முறையிலான கல்வி பற்றி "பழைய குரு - சிஷ்ய முறையிலான கல்வி முறையிலே சில குறைபாடுகளிருப்பினும் அந்த மிகச் சிறந்த கல்வி முறைக்கு ஈடாக வேறொரு முறையும் இப்பொழுது இல்லை"யென "இந்தியாவில் இசையும் பண்பாட்டு மாற்றமும்" எனும் கட்டுரையிலே தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். [16] இக்கருத்தினை ஒருவர் ஏற்கலாம் அல்லது ஏற்காமல் விடலாம்.

எனவே தொகுத்துநோக்கும்போது பரத நாட்டியத்திலே சாஸ்திரம், சம்பிரதாயம் அறிஞர்களின் நல்லுறவுகள் அவசியம் என்பது நன்கு புலப்படும். இக்கலையிலே குறிப்பிட்ட வரையறை அல்லது கட்டமைப்புக்குள்ளே தான் மாற்றங்கள் ஏற்படுத்த வாய்ப்பு அளிக்கப்படுகின்றது என்பதும் குறிப்பிடற்பாலது.

1. (i) Macleod, William T., New Collin's The saurus, oxford. 1985 P.101

(ii) New Encylopacdia of Britanica, vol I, USA, 1990, P.467

2. Monier Williams, A Sauskrit English Dictionary oxford, 1963, P.741

3. Rukminidevi Arundale, Spiritual Back ground, Bharata Natyam Ed.by Sunil Kothari, Bombay, 1979, P.13

4. Padamasubramanyam, Bharata's Art Then and Now, Mardras, 1979, P.36

5. நாகசுவாமி இரா.(பதிப்பாசிரியர்), கல்வெட்டியல், சென்னை

6. நடராசன் தி.சு. "முத்தமிழ் அதன் வரலாறும் கருத்தியலும்" சமூகவிஞ்ஞானம் மலர் 2 இதழ் 3, மார்ச் 2005, சென்னை ப.16 23

7. Ari Darom, Bharata NaTya as a Symbolic Expressim of Saivasiddhanta, Bullction of the Traditional Cullures, Madras, January- June, 1980.

8. Monier Williams மே.கு.நூ.ப. 106

9. Monier Williams மே.கு.நூ.ப. 462

10. Monier Williams மே.கு.நூ.ப. 1078

11. Monier Williams மே.கு.நூ.ப. 587

12. நந்திகேசுவரர், அபிநயதர்ப்பணம் வீரராகவன் தமிழ்மொழி பெயர்ப்புடன், சென்னை, 1994, ப.55 56

13. More R.J, Tradition and Politices of South Asia, New Delhi, 1979, P.10

14. More R.J, Tradition and Politics of South Asia, New Delhi, 1979, P.32

15. நாரயணவேலுப்பிள்ளை எம், தெய்வீகக் கதைகளும் கலைகளும், சென்னை 1985 (தினமணிக்கதிரில் (1.7.1984) வெளிவந்த பேட்டியின் மறுபிரசுரம்)

16. Narayana Menon, Music and Cultural change in India, Cultures, UNESO, Paris, 1974, PP. 59 73, Vol I, No 3.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]